



Sri Erikatha Raman - Madurantakam







# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : கீ ப ரா வி

மலர் 2 இதழ் 7 26.02.2026


Shree Vishvamangala Vishvaroopa Anjaneya Swamy





ஸ்ரீமதே வராஹ மஹாதேசிகாய நம:

# முத்துக்கள்

## விரோத பரிஹாரம்

### உ.வே.நாவல்பாக்கம் வாசுதேவாசாரியர்

**1**

- ஜீவனும் பரமனும் வேறானவர் என்பவை பேத வாக்யங்கள்.
- ஜீவனும் பரமனும் ஒன்றே என்பவை அபேத வாக்யங்கள்.

மேலோட்டமாக பார்த்தால், இரண்டுக்கும் விரோதம் (முரண்பாடு) தோன்றும்; பிற மதத்தினர் இந்த விரோதத்தை ஒத்துக் கொண்டனர்; இதற்கு பரிஹாரம் சொல்லவில்லை.

**அத்வைத மதம்** : இரண்டுக்கும் முரண்பாடு இருப்பதால், பேத வாக்யத்தை உண்மையாக எடுத்துக் கொள்ளக் கூடாது; அவற்றை விட்டு விட்டு, அதே வாக்யங்களையே சரியானவையாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

**பாஸ்கரர் மதம்**: முரண்பட்ட இரண்டும் கூட ஒரு விஷயத்தில் வரலாம்; அதமை சகித்துக் கொள்ள வேண்டும்.

**த்வைத மதம்**: பேதவாக்யம்தான் சரியானது; அபேத வாக்யத்துக்கு நேர் அர்த்த கொள்ளாமல், வேறு ஏதாவது ஒரு விளக்கம் கொடுத்து, பொருத்திக் கொள்ள வேணும்

**நம் மதம் : இரண்டு வாக்யங்களுக்கும் விரோதமே கிடையாது; ஜீவனும் பாமலும் ஸ்வரூபத்தில் வேறானவர் என்று பேத வாக்யம் சொல்கிறது; ஆனால், பரமனுக்குள் ஜீவன் அடக்கம் என்பதால் ஒன்றானவர் என்று அபேத வாக்கியம் சொல்கிறது.**

*2*

**விரோதம்** : பெருமானுக்கு சரீரம் இல்லை என்கிறது வேதம்; திவ்யமான சரீரம் உண்டு என்றும் சொல்கிறது.

**பரிஹாரம்** : நமக்கு இருப்பது போல, சுகதுக்கமயமான கர்ம-சரீரம் கிடையாது; திவ்யமான சரீரத்தை அவனே தன் ஸங்கல்பப்படி எடுத்துக் கொள்கிறான். எனவே, முரண்பாடு இல்லை.

**3**

**விரோதம்**: பெருமானுக்கு குணங்கள் உண்டு என்றும் குணங்கள் இல்லை என்றும் வேதம் சொல்கிறது.

**பரிஹாரம்** : நல்ல கல்யாண குணங்கள் உண்டு; இழி குணங்கள் இல்லை என்று அர்த்தத்தை வேதமே விளக்குகிறது.

எனவே. நம் மதத்தில் விரோத பரிஹாரம் செய்வது அழகான விஷயம்; வேதம் சொல்லும் விஷயங்கள் எல்லாவற்றையும் பக்தியுடன் ஏற்று விளக்குவது நம் மதம்.

**விஷயம்** : எம்பெருமான் ஸர்வ-ரக்ஷகன்; எல்லாரையும் எல்லா விதத்திலும் காப்பாற்றுபவன்; இதுதான் 'அ'காரத்தின் அர்த்தம்.
**விரோதம்** : மனிதர்கள் பலரும் கஷ்டப்பட்டுக் கொண்டு துக்கத்தில் இருக்கின்றனர்;

அவர்களை பெருமான் துக்கத்திலிருந்து காப்பாற்றவில்லையே! இவர்கள் படும் துக்கம் அவனுக்குத் தெரியாது என்று சொல்ல முடியாது; ஸர்வஜ்ஞன் ஆன அவனுக்கு தெரியாத விஷயம் கிடையாது; தெரிந்தே, இவர்கள் படும் துக்கத்தைப் பார்த்துக் கொண்டே, காப்பாற்றாமல் இருக்கிறான்; அவனை ஸர்வரக்ஷகன் என்பது எப்படி?

**பரிஹாரம்** - எம்பெருமான் செய்யும் ரக்ஷணம் என்பது இரண்டு விதம் ஆகும்.

1.பொதுவாக எல்லாருக்கும் அடிப்படையான ஆத்மாவை நித்யமாக வைத்திருக்கிறான்; மேலும் அனுபவத்துக்கு ஏற்ப உடல், ஜ்ஞானம், விருப்பம். இந்திரியம். செய்யும் திறமை முதலியவற்றையும் கொடுத்துள்ளான்; ஆகவே, இவற்றைக் கொடுத்து ரக்ஷிக்கிறான்; இது பொதுவானது.

2. தனிப்பட்ட முறையில் அவரவர்களுக்கு வரும் சுகதுக்கங்களை அரைவர்களுடைய கர்மங்களுக்கு ஏற்பவே பெருமான் அளிக்கிறான்; பொதுவாக அளிப்பதில்லை; சாஸ்த்ர-வரையறைக்கு உட்பட்டு ரக்ஷணம் செய்கிறான்.
ஆனாலும் அவன் ரக்ஷகன் என்பதில் குறை வராது; ஏனெனில், அவன் நல்ல முறையில் ரக்ஷிக்கவே சித்தமாக இருந்தபோதிலும், மக்கள் தமது செயல்முறைகளால் ரக்ஷணம் பெறாமல் இருக்கிறார்கள் என்பதே உண்மை.

(உ-ம்.உலகில் பெற்றோர்கள் மகனுக்கு படிப்புக்கு வேண்டிய எல்லா ஏற்பாடும் செய்து கொடுப்பர்; ஆனாலும், அவன் சரியாக படிக்காமல் பரீக்ஷையில் தவறினால், பொறுப்பல்ல; அவர்களது ரக்ஷணத்தில் குறைவில்லை. அதுபோல ஒரு அரசன் தனது குடிமக்களில் தீயவர்களைத் தண்டிப்பதும் நல்லவர்களுக்கு சுகம் அளிப்பதும் நல்ல ரக்ஷணத்தின் அடையாளம்தானே!)

## 5

**விஷயம்** : ஸந்த்யாவந்தனம் முதலிய நித்ய-கர்ம - அனுஷ்டானங்களில் பிற தெய்வங்கள் பற்றி மந்த்ரங்கள் நிறைய வருகின்றன.

**விரோதம்**: பெருமானிடம் ஏகாந்த- பக்தி செய்பவன் பிற தெய்வங்களை சேவிக்கக் கூடாது; போற்றக் கூடாது; அப்படி இருக்க, பிற தெய்வங்களை பூஜிக்கும்படி இந்த கர்ம-அனுஷ்டானங்களை செய்வது சரியாகுமா?

**பரிஹாரம்**: சாஸ்த்ரம் சொன்ன முறையில் நித்ய-கர்ம-அனுஷ்டானம் எல்லாம் செய்ய வேண்டும்; அப்படியே நம் பூர்வ ஆசார்யர்கள் அனைவரும் செய்து வந்தனர். இவற்றில் அக்னி, இந்த்ரன் முதலிய சில சொற்களின் அர்த்தத்தை ஆராய்ந்தால், நேராக பெருமானையே குறிக்கும்படி பொருந்தும்; அப்படி பொருந்தாமல் போனாலும், பிற தெய்வங்களை சொல்லும்போது, அந்தந்த தெய்வத்துக்குள் அந்தர்யாமியாக இருக்கும் பெருமானை நினைத்து, அவனுக்காக செய்ய வேண்டும்; இதனை ஸ்ரீமத் கீதாபாஷ்யம், நித்யம் முதலிய நூல்களில் எம்பெருமானார் சாதித்துள்ளார்; ஆகையால், சாஸ்த்ரம் சொன்னபடி செய்வதில் விரோதம் வராது.

சாஸ்த்ரம் சொல்லாத முறையில் நாமாக ஒரு பலனுக்காக பிற தெய்வங்களை பூசிப்பது கூடாது; அதனை செய்தால்தான் முரண்பாடு வரும்; நம் ஏகாந்த பக்தியுடன் இது சேராது.

## 6

**விஷயம்**: மோக்ஷம் பெறும் ஜீவன் என்பவன் பரமனுக்கு சமமாக ஆகிறான் என்று வேதம் சொல்கிறது; பரமனுக்கு சேஷனாக - தாஸனாக இருக்கிறான் என்றும் சொல்கிறது.

**விரோதம்** : ஜீவன் என்பவன் பெருமானுக்கு தாஸன்; பெருமாள்தான் அவனுடைய ஸ்வாமி: இரண்டு பேரும் எப்படி சமம் ஆக முடியும்?

**பரிஹாரம்:** அடியவன் - ஸ்வாமி என்னும் முறையில் பார்த்தால், இருவரும் சமம் இல்லைதான்! ஆனால், மோக்ஷ-ஆனந்த-அனுபவம் என்பது இருவருக்கும் சமம் ஆகும்; அதைத்தான் வேதம் சொல்கிறது; வேதாந்த ஸூத்ரத்தில் வ்யாஸரும் தெளிவாக சாதிக்கிறார்.

**ஸ்ரீதேசிகன் சாதிக்கும் உதாஹரணம்** - தங்கத்தை தராசில் நிறுத்தி எடை பார்க்க குன்றுமணியை பயன்படுத்துவார்கள்; தங்கமும் குன்றுமணியும் எடையில் சமமாக இருக்க வேண்டும் என்பதுதான் கணக்கு; ஆனால், தரத்தில் இரண்டும் ஒன்றாகி விட முடியுமா? விலை மதிப்பு அதிகமான தங்கம் எங்கே? பைசா பெறாத குன்றுமணி எங்கே?

அதேபோல, ஜீவன் தாஸன்தான்; பெருமான் ஸ்வாமிதான்; மதிப்பில் இருவரும் சமம் அல்ல; ஆனால், மோக்ஷ-ஆனந்த-அனுபவம் இருவருக்கும் சமமாக இருக்கும்; அந்த விதத்தில் மிகவும் சமமாக இருப்பர் என வேதம் சொல்கிறது.

இறுதியில் ஸ்வாமி சாதிக்கிறார் - 'இனியும் பின்னரும் இது போன்ற சந்தேகங்கள் வந்தால், இதே முறையில் பதில் சொல்லிக் கொண்டு விரோத-பரிஹாரம் நாமே செய்து கொள்ள முடியும்; ஆகவே குறைவற்ற நிறைவான ஜ்ஞானம் பெறலாம் என்று.

இது நம் ஸ்ரீவைஷ்ணவ வாழ்வை நிறைவு செய்வதற்கே அவதாரம் எடுத்த ஸ்ரீதேசிகனின் பரம அனுக்ரஹம் ஆகும்.

